# இந்து சமய அறநிலையத்துறையின் செயல்பாடுகள், குறித்த சீராய்வுக் கூட்டம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நடைபெற்றது.

சென்னை, செப். 4 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில் நேற்று (03-09-2024) ஆணையர் அலுவலகத்தில் இந்து சமய அறநிலையத்துறையின் செயல்பாடுகள், சட்டமன்ற அறிவிப்புகளின் பணி முன்னேற்றம் குறித்த 31வது மாதாந்திர சீராய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் 2021 - 2022, 2022 - 2023 மற்றும் 2023 - 2024 ஆம் நிதியாண்டுகளில் சட்டமன்றத்தில் இந்து சமய அறநிலையத்துறையின் மானியக் கோரிக்கையின் போது அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளில் நிறைவு பெற்ற பணிகளை தவிர இதர பணிகளின் முன்னேற்றம் குறித்தும், 20242025 ஆம் நிதியாண்டில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் தற்போதைய நிலை குறித்தும், அனைத்து மண்டல இணை ஆணையர்கள் மற்றும் பொறியாளர்களுடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. குறிப்பாக, 1000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தொன்மையான திருக்கோயில்களை புனரமைக்கும் திருப்பணிகள், ஒருங்கிணைந்த பெருந்திட்ட வரைவின் (Master Plan) கீழ், திருக்கோயில்களில் நடைபெற்று வரும் பணிகள், ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டிற்கு மேல் நடைபெற்று வரும் திருப்பணிகள், புதிதாக உருவாக்கப்பட்டு வரும் தங்கத்தேர், வெள்ளித் தேர், மரத்தேர்கள் மற்றும் தேர் மராமத்து பணிகளின் தற்போதைய நிலை, திருக்குளங்கள் புனரமைக்கும் பணிகள், மலைக்கோயில்களில் செயல்படுத்தப்படும் ரோப் கார் திட்டம், மற்றும் திருத்தேர் பாதுகாப்பு கொட்டகை கட்டுமானப் பணிகள், ஒருகால பூஜைத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய திருக்கோயில்கள், கிராமப்புற மற்றும் ஆதிதிராவிடர்கள் வசிக்கும் பகுதிகளிலுள்ள திருக்கோயில்களின் திருப்பணிகள், இராஜகோபுரம், அன்னதானக் கூடங்கள், திருமண மண்டபங்கள், அர்ச்சகர் மற்றும் பணியாளர் குடியிருப்புகளின் பணி முன்னேற்றம் போன்ற பொருண்மைகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு , பழனி, தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் உள்துறைக்கு பணியமர்த்தம் செய்யப்பட்ட 11 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

இந்து சமய அறநிலையத் துறையின் செயல்பாடுகள், சட்டமன்ற அறிவிப்புகளின் பணி முன்னேற்றம் குறித்து மண்டல இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள் மற்றும் பொறியாளர்களின் 31 வது சீராய்வுக் கூட்டம் இன்று நடைபெற்றது. இந்த அரசு பொறுப்பேற்றபின் இதுவரை 2,005 திரு க்கோயில்களுக்கு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. இந்தாண்டு இறுதிக்குள் இதன் எண்ணிக்கையை 2,500 க்கு மேல் உயர்த்துவதற்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. அதேபோல் ரூ.6,703 கோடி மதிப்புள்ள 6,853.14 ஏக்கர் சொத்துக்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளதோடு, 1,72,302 ஏக்கர் திருக்கோயில் நிலங்கள் அளவீடு செய்யப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின் இந்து சமய அறநிலையத்துறையில் ரூ.5,372.72 கோடி மதிப்பீட்டில் 20,252 பணிகள் நடைபெற்று வந்தன. இவற்றில் அரசு நிதி மற்றும் திருக்கோயில் நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட பணிகளில் 4,309 பணிகளும், உபயதாரர் நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட பணிகளில் 4,422 பணிகளும் நிறைவு பெற்றுள்ளன. ஒட்டுமொத்தமாக உபயதாரர்கள் மட்டும் ரூ.1,059.58 கோடி மதிப்பிலான 8,819 பணிகளை செய்து வருகின்றனர். இது இந்த அரசின் மீதும் துறையின் மீதும் உபயதாரர்கள் வைத்துள்ள நன்மதிப்பினையும், அவர்களின் எண்ணம் முழுமையாக ஈடேறுகிறது என்ற நம்பிக்கையை காட்டுகிறது.

1,000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தொன்மையான திருக்கோயில்களை புனரமைக்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூ.300 கோடியை அரசு மானியமாக வழங்கியுள்ளார். இந்நிதியை கொண்டும், உபயதாரர் நிதியின் மூலமாகவும் இதுவரை 274 திருக்கோயில்களில் ரூ.427 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், திருத்தேர்களை சீரமைத்தல், புதிய தங்க மற்றும் வெள்ளித் தேர்களை உருவாக்குதல், திருக்குளத் திருப்பணி, புதிய திருமண மண்டபங்கள், பக்தர்களுக்கான அடிப்படை வசதிகள் என அனைத்து வகையிலும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நாடாளுமன்ற தேர்தல் நடைபெற்ற காலக்கட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை அலுவலர்களுக்கு தேர்தல் பணி இல்லாததால் ஏற்கனவே நடைபெற்று வந்த பணிகள் துரிதப்படுத்தப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

இந்து சமய அறநிலையத் துறைக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்ட செயல் அலுவலர்கள், இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள், சுருக்கெழுத்து தட்டச்சர்கள் என 381 நபர்களுக்கும், அமைச்சு பணியில் 172 நபர்களுக்கும் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன. திருக்கோயில்களில் தொடர்ந்து 5 ஆண்டுகள் தற்காலிகமாக பணிபுரிந்த 1,289 பணியாளர்கள் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளனர். இத்துறையில் பதவி உயர்வு வழங்கப்படாமல் நீண்டகாலமாக நிலுவையில் இருந்த 713 அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. தற்போது 38 செயல் அலுவலர்களுக்கு உதவி ஆணையர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

திருக்கோயில்களுக்கு வரப்பெற்ற பலமாற்று பொன் இனங்களில் பயன்படுத்த இயலாத பொன் இனங்களை பிரித்தெடுத்து ஒன்றிய அரசின் தங்க உருக்காலையில் உருக்கி பாரத ஸ்டேட் வங்கியில் முதலீடு செய்யும் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதியரசர்கள் நியமிக்கப்பட்டு அவர்கள் முன்னிலையில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தின் மூலம் திருக்கோயில்களுக்கு இதுவரை ரூ.6 கோடி வட்டித் தொகையாக கிடைக்கப்பெறுகிறது. குணசீலம், பழனி திருக்கோயில்களில் பயன்பாடற்ற பொன் இனங்கள் பிரித்தெடுக்கப்பட்டு ஒன்றிய அரசின் உருக்காலைக்கு அனுப்ப தயார் நிலையில் உள்ளது. வரும் 2025 ஆம் ஆண்டிற்குள் இத்திட்டத்தின் மூலம் சுமார் 25 கோடி ரூபாய் அளவிற்கு வட்டித் தொகை கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு எல்லோருக்கும் எல்லாம் என்ற கொள்கையோடு செயல்பட்டு வருகிறது. அனைத்து மதத்தினரும் சகோதரத்துவத்தோடு வாழ வேண்டும் என்பதற்காகவே நாங்கள் கிறிஸ்துமஸ், ரம்ஜான், மகாவீர் ஜெயந்தி, ஹோலி பண்டிகை என அனைத்து நிகழ்வுகளிலும் பங்கேற்று வருகின்றோம். இந்த ஆட்சி சாதி, மத, இன, மொழி உணர்வுகளை கடந்து அனைத்து மதத்தினரும் வழிபடுகின்ற உரிமையை பெற்று தருகின்ற ஆட்சியாக திகழ்ந்து வருகிறது. ஆன்மிக அன்பர்கள் மகிழ்ச்சியுறும் வகையில் புதிய திட்டங்களை இந்து சமய அறநிலையத்துறை செயல்படுத்தும்.

முதலமைச்சர் அவர்கள், வடசென்னை வளர்ச்சித் திட்டம் என்ற உன்னதமான திட்டத்தை ரூ.5,180 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தி வருகின்றார். இத்திட்டத்தினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் தொடர்ந்து ஆய்வு செய்து அறிவுரைகளை வழங்கி வருகின்றார். சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் ரூ.1,164 கோடியை தனது பங்களிப்பாக இத்திட்டத்திற்கு வழங்கியுள்ளது. வடசென்னை வாடா சென்னையாக திகழ அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வடகிழக்கு பருவமழை எதிர்கொள்ள இந்த அரசு முழு வீச்சில் தயாராக உள்ளது. இந்த ஆட்சி பொறுப்பேற்றபோது இருந்த நிலை ஆண்டுதோறும் படிப்படியாக குறைந்து வருவதை அனைவரும் அறிவீர்கள். முதலமைச்சர் அவர்கள் ஓய்வுபெற்ற ஆட்சிப்பணி அலுவலர் திருப்புகழ் அவர்கள் தலைமையில் குழு ஒன்றை அமைத்து பணிகளை மேற்கொண்டார். இதுவரை 800 கிலோ மீட்டருக்கு மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. இதுவரை மழைநீர் வடிகால் பணிகளில் சுமார் 75 சதவீதம் நிறைவு பெற்றுள்ளது. வரும் காலங்களில் வடகிழக்கு பருவமழையினால் மக்களுக்கு எவ்வித இடையூறும் ஏற்படாத வண்ணம் பணிகள் துரிதப்படுத்தப்பட்டு வருகின்றன. இதுதொடர்பாக நாளைய தினம் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சியில் ஆய்வுக் கூட்டம் நடைபெறுகிறது என்று தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலர் டாக்டர் பி.சந்தரமோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் டாக்டர் இரா. சுகுமார், திருமதி சி.ஹரிப்பிரியா, திருமதி மா. கவிதா, தலைமைப் பொறியாளர் பி.பெரியசாமி, மாவட்ட வருவாய் அலுவலர்கள், இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள் மற்றும் பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் .பி.கே.சேகர்பாபு தலைமையில் நேற்று (03.09.2024) ஆணையர் அலுவலகத்தில் இந்து சமய அறநிலையத்துறையின் செயல்பாடுகள். சட்டமன்ற அறிவிப்புகளின் பணி முன்னேற்றம் குறித்த 31வது மாதாந்திர சீராய்வுக் கூட்டம் நடைபெற்றது. உடன் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலர் டாக்டர் பி.சந்தரமோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் டாக்டர் இரா. சுகுமார், திருமதி சி.ஹரிப்பிரியா, திருமதி மா. கவிதா. தலைமைப் பொறியாளர் பி. பெரியசாமி. மாவட்ட வருவாய் அலுவலர்கள், இணை ஆணையர்கள் மற்றும் பொறியாளர்கள் உள்ளனர்.

# பா.மணிமாறன் இல்ல மணவிழா! மு.சண்முகம் எம்.பி. தலைமையில்!

## அமைச்சர் பெருமக்கள் – கழக முன்னணியினர் வாழ்த்துரை!

சென்னை, செப். 4 -

தமிழ்நாடு மின் கழக தொ.மு.ச. மாநில பொதுச் செயலாளர் பா.மணிமாறன் - ம.விஜயலட்சுமி ஆகியோரின் புதல்வி ம.மதுமிதாவுக்கும், தூத்துக்குடி மாவட்டம், புங்கவர் நத்தம் ஏ.என்.தேன்ராஜ் - (நினைவில் வாழும்) டி. பெத்தனாட்சி - நலமுடன் டி.தங்கம்மாள் ஆகியோரின் புதல்வர் தே.காத்தவராயனுக்கும் மணவிழா 6.9.2024 - வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் வேலப்பன்சாவடி, பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையில்



அமைந்துள்ள கே.வி.என். கல்யாண மண்டபத்தில் நடைபெறுகிறது.

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் நல்வாழ்த்துகளுடன் நடைபெறும் இம்மணவிழாவிற்கு தொ.மு.ச. பொதுச் செயலாளர் மு. சண்முகம் எம்.பி. தலைமை வகித்து மணமக்களை வாழ்த்துகிறார்.

இம்மணவிழாவில் கழகப் பொதுச் செயலாளர், கழகப் பொருளாளர், துணைப் பொதுச் செயலாளர்கள், அமைச்சர் பெருமக்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், தலைமை கழகச் செயலாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் தொழிலாளர்கள் முன்னேற்றச் சங்க பேரவை நிர்வாகிகள்,

மாநகர மேயர்கள், துணை மேயர்கள், பகுதி கழகச் செயலாளர்கள், துணைச் செயலாளர்கள் அனைத்து வட்டக் கழகச் செயலாளர்கள், மாநகர மாமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு மின் கழகத் தொழிலாளர், முன்னேற்றச் சங்க நிர்வாகிகள் மற்றும் அனைத்து கழக முன்னோடிகள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

### வியாசர்பாடி ஜீவா ரெயில் நிலைய சுரங்கப்பாதை மேம்பால கட்டுமானப் பணிகள் -

# புரசைவாக்கம் கழிவு நீரிறைக்கும் நிலையம் 2 நாட்கள் பணி நிறுத்தம்!

## சென்னை குடிநீர் வாரியம் தகவல்!

சென்னை, செப்.4-

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் கணேசபுரம் வியாசர்பாடி ஜீவா ரயில் நிலைய சுரங்க பாதை மேம்பால கட்டுமான பணிகளுக்காக, டாக்டர் அம்பேத்கார் கல்லூரி சாலையில் உள்ள 1000 மி.மீ விட்டமுடைய கழிவுநீர் உந்து குழாயில் வால்வு பொருத்தும் பணிகள் மேற்கொள்ளப்படுவதால் 04.09.2024 அன்று மாலை 6 மணி முதல் 05.09.2024 அன்று மாலை 6 மணி வரை (24 மணி நேரம்) மண்டலம் - 6 க்குட்பட்ட புரசைவாக்கம் கழிவு நீரிறைக்கும் நிலையம் செயல்படாது.

எனவே, இராயபுரம், திரு.வி.க நகர், அண்ணா நகர், தேனாம்பேட்டை மண்டலங்களுக்குட்பட்ட கீழ்கண்ட இடங்களில் உள்ள இயந்திர நுழைவாயில்களில் கழிவுநீர் நிரம்பி வெளியேறும் நிலை ஏற்பட்டால் அவசரத் தேவைகளுக்காக கழிவுநீர் உறிஞ்சும் இயந்திரங்கள் மூலம் கழிவுநீரை வெளியேற்ற கீழ்க்காணும் பகுதி அலுவலர்களை தொடர்பு கொள்ளவும்.

பகுதிப் பொறியாளர் - 5 (இராயபுரம்) - துணை பகுதிப் பொறியாளர் - கைபேசி எண்.8144930905, 8144930255. லாங்ஸ் கார்டன், நேப்பியர் பூங்கா, வால்டாக்ஸ் சாலை.

பகுதிப் பொறியாளர் - 6 (திரு.வி.க நகர்) - துணை பகுதிப் பொறியாளர் - கைபேசி எண்.8144930906, 8144930216, 8144930217. அயனாவரம், ஏகாங்கிபுரம், பெரம்பூர், செம்பியம்.

பகுதிப் பொறியாளர் - 8 (அண்ணா நகர்) - துணை பகுதிப் பொறியாளர் - கைபேசி எண்.8144930908, 8144930258. சேத்பட், சாஸ்திரி நகர், கீழ்பாக்கம், சுந்தரம் தெரு (PH Road), ஷெனாய் நகர், ஓசான்குளம்.

பகுதிப் பொறியாளர் -9 (தேனாம்பேட்டை) - துணை பகுதிப் பொறியாளர் - கைபேசி எண். 8144930909, 8144930111. கிரீம்ஸ் சாலை.

இவ்வாறு சென்னை குடிநீர் வாரியம் தெரிவித்துள்ளது.

### மு.மணிபாலன் வரவேற்புரை

# கும்முடிப்பூண்டி மேற்கு ஒன்றிய பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. சிறப்புரை

திருவள்ளூர், செப். 4 -

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முடிப்பூண்டி மேற்கு ஒன்றியம் பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று 04.09.2024 புதன்கிழமை காலை 9.30 மணியளவில் ஆரம்பாக்கம் எஸ்.கே.ஜி.திருமண மாளிகையில் ஒன்றிய அவைத்தலைவர் கு.ஜோதிலிங்கம் தலைமையில நடைபெறுகிறது. கும்முடிப்பூண்டி மேற்கு ஒன்றியம் செயலாளர் மு.மணிபாலன் வரவேற்புரையாற்றுகிறார்.

ஒன்றிய நிர்வாகிகள் ஜி.திருஞானம், எம்.உதயகாந்தம்மாள், எம்.கே.ஏசுரத்தினம், கே.பரத்குமார், ஆர். ஜெயபிரகாசம், மு. முனிவேல், பொதுக்குழு உறுப்பினர்கள் பா.செ. குணசேகர், பி.வெங்கடாசலபதி, பி.முத்துசாமி, மாலதி குணசேகர், சாரதம்மா முத்துசாமி, புனிதவள்ளி வெங்கடாசலபதி தலைமை செயற்குழு உறுப்பினர் மாநில சொத்துபாதுகாப்பு குழு துணைத்தலைவர் இ.ஏ.பி.சிவாஜி, மாவட்ட நிர்வாகிகள் மு.பகலவன், பி.ஜெ.மூர்த்தி, கே.வி.ஜி. உமாமகேஸ்வரி, எம்.எல். ரவி, மு.கதிரவன், எஸ். ரமேஷ், ஏ.வி.ராமமூர்த்தி, கே.சுப்பிரமணி, டாக்டர் பரிமளம் விஸ்வநாதன் முன்னிலை வகிக்கின்றனர்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளரும் கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ சிறப்புரையாற்றுகிறார். மாநில நிர்வாகிகள் சி.எச்.சேகர், கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், வெ.அன்பு வாணன், ஜி.ஸ்டாலின், ஏ.ஆர். டி.உதயசூரியன், ஒன்றிய செயலாளர்கள் கி.வே. ஆனந்தகுமார், ந.பரிமளம், இரா.அறிவழகன் கும்முடிப்பூண்டி மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் கே.ஆறுமுகம், டி.மணி, ஜி.ரமேஷ், ஜெ. மோகன் பாபு, ஜி.மனோகரன், அ.மனோகரன், பா. பரத்குமார், கே.சி.ராஜா, எஸ். கஜேநதிரன், சா.விஜயகுமார்,

கே.பிரகாஷ், ஆர்.பார்த்தசாரதி, த.ரஞ்சித்,சி.மணிகண்டன், கே.ஆர்.விக்கி, பா.அப்பாஸ், ஏ.கே.விஜய் வின்செண்ட், எம்.சுப்பிரமணியம், எம்.சிட்டிபாபு, கே.சி.முரளி, எஸ்.பாஸ்கர், சி.நாரகராஜன், ஜெ.மனோஜ்குமார், சரண்யா, இ.இளங்கோ, ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஆ.சந்திரமோகன், ஆ.வேணுகோபால், பி.வி. ரேவதி, சிவஇளங்கோ, எல். மகேந்திரன்,

கருணாகரன், ஜெ.ராஜ்குமார், ராஜேஷ், எஸ்.ராஜ்குமார், சுடர்மதி பிரான்சிஸ், அமுதா, ஜெயா, எச். விஸ்வநாதன், வள்ளியம்மாள் ஒன்றிய கவுன்சிலர்கள் பாசம்அன்பு, கே.சிவா, கலாஉமாபதி, ஊராட்சி மன்ற தலைவர்கள் லாரான்ஸ், ஆர்.சீனிவாசன், அம்பிகா பிர்லா, கோவிந்தம்மாள், சுஜானசுதாகர், விஜயாகுப்பன் கிளைக் கழக செயலாளர்கள், ஒன்றியப்பிரதிநிதகள், கிளைக்கழக நிர்வாகிகள் கழக முன்னோடிகள் பங்கேற்கின்றனர். முடிவில் ஒன்றிய துணைச் செயலாளர் டி. மஸ்தான் நன்றியுரையாற்றுகிறார்.



தாம்பரம் தொகுதி தாம்பரம் மாநகராட்சி உட்பட்ட ஐந்தாவது மண்டலத்தில் 62 வது வார்டில் உள்ள கிழக்கு தாம்பரம் புனித வளனார் மேல்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வி துறை சார்பில் தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ., 11ஆம் வகுப்பு பயிலும் 120 மாணவ மாணவிகளுக்கு மிதி வண்டி வழங்கினார் இன்நிகழ்ச்சியில் பள்ளி மாணவ மாணவியர்கள் சட்டமன்ற உறுப்பினருக்கு சிறப்பான வரவேற்பு அளித்தனர் இதில் 5 வது மண்டல குழு தலைவர்கள் எஸ் இந்திரன் 4 வது மண்டலத்தலைவர் டி.காமராஜ் மாமன்ற உறுப்பினர்கள் பி ஜோதிகுமார், சசிகலா கார்த்திக், கொடி தாமோதரன், பகுதி துணைச் செயலாளர் வேலுமணி, வட்டச் செயலாளர் வா லோகநாதன். சீனிவாசகுமார். பள்ளி தாளாளர் சுரேஷ்குமார், தலைமை ஆசிரியர் லீனா ரோஸ்லின் மேரி. லாரன்ஸ்.கழகத் நிர்வாகிகள் டிவி முருகன்,பிரபாகரன்,செல்வம், ஸ்ரீதர், தங்கராஜ், தனலட்சுமி, மரிய இருதயராஜ், ஆரோக்கியராஜ், ச.சுரேஷ், சந்தோஷ், முத்துக்குமார், பவுன்ராஜ், பாலாஜி, புஷ்பராஜ், செல்வம், எல் எம் சக்தி, தினேஷ், ராஜேஷ், கே எம் குமார், பள்ளி மாணவர்கள் உடன் இருந்தனர்.

### தியாகராயர்நகர் கிழக்குப் பகுதி

# 134 வது வட்டப் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## வட்டச் செயலாளர் ஆர்.சக்திவேல் அறிக்கை

சென்னை,செப்,4,

சென்னை தென் மேற்கு மாவட்டம்,தியாகராயர் நகர் கிழக்குப் பகுதி 134 வது வட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (4.9.2024 புதன்கிழமை) மாலை 6 மணிக்கு ஆரியா கவுடா சாலையில் உள்ள ஷோபா திருமண மண்டபத்தில் எனது (ஆர். சக்திவேல்) தலைமையில் நடைபெறுகின்றது. பகுதிச் செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ.முன்னிலை வகிக்கிறார். .ராஜேந்திரன்,எம். இராமலிங்கம்,ஜி.ஜெகதீஷ், இ.கலா, பழனி, ஜெயகோபால்,லட்சுமி காந்தன், ஜெனார்த்தனன், விக்னேஷ், கார்த்திக் ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

இதில் மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல். ஏ.,தமிழச்சி தங்க பாண்டியன் எம்.பி., சென்னை அரங்கநாதன், கே.ஏழுமலை, கோ.சு.மணி, மாம்பலம் ஆ.சந்திரசேகர், சி.மாரி ஆியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இ.மாரிமுத்து, கே.ரவி, எம்.பன்னீர்செல்வம், ஏ.சங்கர், ஏ.சுகுமார்,பி.கிருஷ்ணமூர்த்தி, ஆர்.பாலகுமார் ஏ.எஸ்.வினோத்குமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி வட்டச் செயலாளர் ஆர். சக்திவேல் கேட்டுக்கொண்டுள்ளார்.



தலைமைச் செயலகத்தில் நேற்று (03.09.2024) சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன் தலைமையில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் இயங்கும், சமூக நலத் துறை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணிகள், குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை ஆகியவற்றின் திட்டப் பணிகளின் முன்னேற்றம் மற்றும் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அரசுச் செயலாளர் திருமதி. ஜெயஸ்ரீ முரளீதரன், சமூக நல ஆணையர் வே. அமுதவல்லி, குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை இயக்குநர் ஜானி டாம் வர்கீஸ், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் துறை இயக்குநர் திருமதி. மெர்சி ரம்யா, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அரசு இணைச் செயலாளர் திருமதி. ச. வளர்மதி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.